Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டரை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26

சென்னை கீழ்ப்பாக்கத்தில் குடியிருப்புக் கட்டட வளாகம் ஏலம்: ஏலத்துக்கு முந்தைய விளக்கக் கூட்டம் நவம்பர் 28-ல் நடைபெறுகிறது

சென்னை – 14 நவம்பர், 2026 மத்திய நிதி அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும், மத்திய அரசுக்குச் சொந்தமான தேசிய நிலப் பணமாக்கல் கழகம் (என்எல்எம்சி - NLMC), சென்னை கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள குடியிருப்புக் கட்டடத்தை மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்ய அறிவித்துள்ளது.

இதற்கான ஏல அறிவிக்கை கடந்த நவம்பர் 5-ஆம் தேதி வெளியிடப்பட்டது. பிரயாக்ராஜ், சென்னை ஆகிய இடங்களில் உள்ள மொத்தம் 12 குடியிருப்புகளை ஏலம் விடும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் குடியிருப்பின் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத் தொகை ரூ.1.64 கோடியாகும்.

முன்னதாக நவம்பர் 20-ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த ஏலதாரர்களுக்கான விளக்கக் கூட்டம், நவம்பர் 28-ஆம் தேதி காலை 11 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் விளக்கம் பெறலாம்.

ஏலத்தில் பங்கேற்கப் பதிவு செய்து முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய கடைசி நாள் 2026 டிசம்பர் 7.

விருப்பமுள்ளவர்கள் சொத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்யலாம். ஏல விவரங்கள், நிபந்தனைகளை அதிகாரப்பூர்வ இணையதளங்களில் தெரிந்துகொள்ளலாம்.

ஏல இணையதளம்: https://eauction.enivida.com

என்எல்எம்சி இணையதளம்: https://nlmc.dpe.gov.in